# கே. பி. ஜானகி அம்மாள்

**பெயர் :** கே. பி. ஜானகி அம்மாள்
**பிறப்பு :** 09-12-1917
**பெற்றோர் :** பத்மநாபன், லட்சுமி
**இடம் :** திருநகர், மதுரை
**வகித்த பதவி :** மேடை நாடகக் கலைஞர்

## வாழ்க்கை வரலாறு :

கே.பி. ஜானகி அம்மாள் அவர்கள் தமிழகம் முழுவதிலும், அம்மா என்று அன்போடு அழைக்கப்பட்டவர், போற்றப்பட்டவர். 1928ம் ஆண்டில் 12வது வயதில் மாதம் 25 ரூபாய் சம்பளத்தில் பழனியாபிள்ளை பாய்ஸ் கம்பெனியில் சிறுமி ஜானகி குடும்பத்தினரால் சேர்க்கப்பட்டார். அரசியலில் கொண்ட ஈடுபாட்டின் காரணமாக ஜானகி படிப்படியாக நாடகங்களில் நடிப்பதை நிறுத்திவிட்டார். நாடகத் துறையைவிட்டு விலகும் போது அவருக்கு மதுரை மேலமாசி வீதியில் இரண்டு பெரிய வீடுகள் சொந்தமாக இருந்தன. 1939ம் ஆண்டில் நேதாஜி மதுரை வந்தபோது அதிகாரப்பூர்வ காங்கிரஸ் தலைவர்கள் அவருக்கு வரவேற்பு தரவில்லை. ஆனால் குருசாமியைத் தலைவராகவும், ஜானகியை செயலாளராகவும் கொண்ட மதுரை நகர் காங்கிரஸ் கட்சி அவருக்கு மாபெரும் வரவேற்பு கொடுத்தது. பசும்பொன் தேவரும், ஜானகியும் உடன்வர நேதாஜி மதுரை நகரின் பல பகுதிகளுக்கு விஜயம் செய்தார். நகர் முழுவதும் மக்கள் குழுமி நின்று உற்சாக வரவேற்பு அளித்தனர். பிரிட்டிஷ் ஆட்சிக்காலத்தில் யுத்த - எதிர்ப்புப் பிரச்சாரம் செய்ததற்காக குருசாமி, ஜானகி இருவருக்கும் 6 மாதக் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது. குருசாமி கண்ணணூர் மத்திய சிறைக்கும், ஜானகி வேலூரில் உள்ள பெண்கள் மத்திய சிறைக்கும் கொண்டு செல்லப்பட்டனர். யுத்த - எதிர்ப்புப் பிரச்சாரத்திற்காக தென்னிந்தியாவிலேயே முதன் முதலாக தண்டிக்கப்பட்ட பெண் அரசியல்வாதி ஜானகி அம்மாள்தான். ஜானகியம்மாள் 1967 முதல் 1971 வரை தமிழக சட்டமன்ற உறுப்பினராக சிறப்பாகச் செயலாற்றினார். சமுதாயத்தில் சரிபாதியாக வாழ்கின்ற பெண் குலத்தின் விடுதலையில் அக்கறை கொண்ட அம்மா, அனைத்திந்திய ஜனநாயக மாதர் சங்க அமைப்பை உருவாக்குதில் பங்கு கொண்டு 1974ம் ஆண்டில் நடைபெற்ற தமிழக ஜனநாயக மாதர் சங்கத்தின் முதல் மாநாட்டில் ஜானகி அம்மா தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார். கடைசிக் காலம் வரை மாநிலத் தலைவராகச் செயல்பட்டவர். அவரது பிரதான பணியும், உழைப்பும், விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள் இயக்கத்தில்தான் இருந்தது. 60 ஆண்டுகள் பொது வாழ்வுக்குச் சொந்தக்காரர். ஒடுக்கப்பட்ட அனைத்துப்

பகுதி மக்களுக்காக உரத்துக்குரல் கொடுத்த அப்பழுக்கற்ற போராளி! எளிமையான வாழ்வுக்கு இலக்கணம் வகுத்தவர்.

## சுனிதி சாலமன்

**பெயர் :** சுனிதி சாலமன்
**பிறப்பு : 14-10-1939**
**இடம் :** சென்னை
**வகித்த பதவி :** மருத்துவர்
**விருதுகள் :** தேசிய பெண்கள் உயிரியல் அறிவியலாளர் விருது, பத்ம ஸ்ரீ, அன்னை தெரசா நினைவு விருது

### வாழ்க்கை வரலாறு :

சுனிதி சாலமன் என்பவர் ஒரு மருத்துவராவார். இவர்தான் இந்தியாவின், தமிழகத்தின் சென்னையில் 1986 முதன் முதலில் எயிட்ஸ் நோயாளிகள் இருப்பதை கண்டறிந்தவர் ஆவார். இவர் சென்னை மருத்துவக் கல்லூரியில் நுண்ணுயிரியல் பேராசிரியராக அப்போது இருந்தார். இவர் எயிட்ஸ் நோயாளிகளுக்கான இந்தியாவின் முதல் தன்னார்வ ஆலோசனை மற்றும் சோதனை மையத்தை சென்னை மருத்துவக் கல்லூரியில் 1993இல் நிறுவினார். 1993இல் தன் வேலையை விட்டு விலகி எயிட்ஸ் ஆராய்ச்சி மற்றும் கல்வி அளிக்கும் ஒயி.ஆர்.ஜி. கேர் தொண்டு நிறுவனத்தைத் தோற்றுவித்தார். எயிட்ஸ் நோயிக்கு எந்த மருத்துவமனையும் சிகிச்சை அளிக்க மறுத்த அந்தக் காலகட்டத்தில் குறைந்த வசதிகளுடன் சென்னை பாண்டி பசார் பகுதியில் கூடாரத்தில் மருத்துவ சிகிச்சை அளிக்கத் துவங்கினார். இவரது பணிகளை பாராட்டும் விதமாக 2009ஆம் ஆண்டு இந்திய அரசின் அறிவியல் மற்றும் தொழில் நுட்ப அமைச்சகத்தின் தேசிய பெண்கள் உயிரியல் அறிவியலாளர் விருதை வழங்கினர். தமிழ்நாடு எயிட்ஸ் கட்டுப்பாட்டு சங்கம் வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கி பாராட்டியது.

## தீபிகா பள்ளிக்கல்

**பெயர் :** தீபிகா பள்ளிக்கல்
**பிறப்பு : 21-09-1991**
**பெற்றோர் :** சஞ்சீவ், சூசன்பள்ளிக்கல்
**இடம் :** சென்னை
**வகித்த பதவி :** ஸ்குவாஷ்
**விருதுகள் :** அர்ஜுனா விருது, பத்மஸ்ரீ

**வாழ்க்கை வரலாறு :**

தீபிகா பள்ளிக்கல் ஒரு இந்திய ஸ்குவாஷ் விளையாட்டு வீராங்கனை ஆவார். உலக மகளிர் ஸ்குவாஷ் போட்டி தரவரிசையில் முதல் 10 இடத்திற்குள் வந்த முதல் இந்திய பெண் விளையாட்டு வீரர் ஆவார். இவர் 2011-ம் ஆண்டு 3 WISPA பட்டங்களைப் பெற்று தன் விளையாட்டு வாழ்வில் சிறந்த தரவரிசை இடமாக 13-ம் இடம் பெற்றார். அதன் பின்னர் 2012-ம் ஆண்டு அந்த தரவரிசை இடத்தையும் தாண்டி முதல் 10 இடத்திற்குள் வந்தார். தீபிகா பள்ளிக்கல் என்று அறியப்படும் தீபிகா ரெபக்கா பள்ளிக்கல் 21 செப்டம்பர் 1991-ம் ஆண்டு கேரளாவைச் சேர்ந்த சிரியன் கிறித்தவ பெற்றோருக்கு மகளாக சென்னையில் பிறந்தார். நவம்பர் 15, 2013 ஆம் ஆண்டு கிரிக்கெட் வீரர் தினேஷ் கார்த்திக் மற்றும் தீபிகா இருவரும் திருமண நிச்சயம் செய்து கொண்டனர். இவர் தனது முதல் பன்னாட்டு பந்தய விளையாட்டை லண்டனில் விளையாடினார். இதுவரை ஜெர்மன் ஓபன், டட்ச் ஓபன், பிரெஞ்சு ஓபன், ஆஸ்திரேலியன் ஓபன், ஸ்காட்டிஷ் ஓபன் ஆகியவற்றில் பட்டம் வென்றுள்ளார். தீபிகா பள்ளிக்கல் 2006-ம் ஆண்டு முதல் தொழில்முறை ஸ்குவாஷ் விளையாட்டு வீரரானார். தொடக்க காலத்தில் பல ஏற்றத் தாழ்வுகளுடன் இருந்த இவரது தொழில் வாழ்க்கை, 2011-ல் எகிப்தில் இவர் எடுத்துக்கொண்ட பயிற்சிக்குப் பிறகு சீரானதாகவும், பல வெற்றிகளுடையதாகவும் மாறியது.

## பாலசரஸ்வதி

**பெயர் :** பாலசரஸ்வதி
**பிறப்பு :** 13-05-1918
**இடம் :** சென்னை, இந்தியா
**விருது :** பத்ம பூஷன் விருது, பத்ம விபூஷன் விருது
**வகித்த பதவி :** பரதநாட்டிய கலைஞர்

**வாழ்க்கை வரலாறு :**

தஞ்சாவூர் பாலசரஸ்வதி தமிழ் நாட்டில் வாழ்ந்த குறிப்பிடத்தக்க பரதநாட்டியக் கலைஞர் ஆவார். இவரைப்போல கலைநுணுக்கம் சிறந்த நாட்டியம் யாருமே ஆடவில்லை என்னும் அளவுக்கு கலைநுணுக்க ஆர்வலர்கள் மிகப்பலராலும் போற்றப்பட்டவர். இவருடைய முன்னோர் தஞ்சை மராட்டியர்களுடைய அரசவைக் கலைஞர்களாக இருந்தவர்கள். இவரது மூதாதையர்களில் ஒருவரான பாப்பம்மாள் என்பவர் தஞ்சை அரசவையின் இசைக் கலைஞரும், நடனக் கலைஞருமாக இருந்தவர். புகழ் பெற்ற வீணை தனம்மாள் இவரது பாட்டியின் சகோதரியாவார். பாலசரஸ்வதி, தனது நான்காவது வயதிலேயே இசையும் நடனமும் கற்றுக்கொள்ளத் தொடங்கினார். தஞ்சாவூர் நால்வர்களில் ஒருவரான சின்னையாவின்

வழிவந்தவரான கண்டப்பா என்பவர் இவரது குரு. ஏழாம் வயதில் பாலசரஸ்வதியின் நடன அரங்கேற்றம் நடைபெற்றது. பாலசரஸ்வதி, இந்தியா மட்டுமின்றி, வெளிநாடுகளிலும் பரதநாட்டியத்தின் புகழைப் பரவச் செய்தார். பாரம்பரிய நடனம், இசை ஆகிய இரண்டையும் கற்றுத் தேர்ந்து, இரண்டிலும் புரட்சியை ஏற்படுத்தினார். இவரது நடனத்தால் கவரப்பட்ட பிரபல நடன இயக்குநர் உதய் ஷங்கர், இவரது நடனக் கலையை நாடு முழுவதும் பரவச் செய்தார். தனது குடும்பத்திலேயே தென்னிந்தியாவுக்கு வெளியே முதன்முதலாக கலை நிகழ்ச்சி நடத்தியவர் இவர்தான். இவரது முதல் நிகழ்ச்சி 1934-ல் கல்கத்தாவில் நடைபெற்றது. உலகின் தலைசிறந்த நடனக் கலைஞர் எனவும் போற்றப்பட்டார். 1960-களில் சர்வதேச அங்கீகாரம் பெறத் தொடங்கினார். ஆசியா, ஐரோப்பா, அமெரிக்கா என உலகம் முழுவதும் இவரது நிகழ்ச்சிகள் நடந்தன. பல்வேறு கலைக் கல்லூரிகள், பல்கலைக்கழகங்களில் நடன ஆசிரியராகப் பணியாற்றவும், நாட்டிய நிகழ்ச்சிகள் நடத்தவும் 1980களில் அமெரிக்கா சென்றார். சென்னை மியூசிக் அகாடமி தந்த ஊக்கத்தால் அந்த அமைப்புடன் இணைந்து நாட்டியப் பள்ளியை நிறுவினார். இவரது நடனக் கலையால் ஈர்க்கப்பட்ட சத்யஜித் ரே இவரை வைத்து பாலா என்ற குறும்படம் தயாரித்தார். நாட்டின் 2-வது உயரிய விருதான பத்ம விபூஷண் விருது இவருக்குக் கிடைத்தது. சென்னையில் உள்ள இந்தியன் ஃபைன் ஆர்ட்ஸ் சொசைட்டி, இவருக்கு சங்கீத கலாசிகாமணி விருதை வழங்கியது. மேலும் பத்மபூஷன் விருது, சங்கீத நாடக அகாடமி விருது உள்ளிட்ட ஏராளமான விருதுகளையும், பட்டங்களையும் பெற்றார். உலக அளவில் பல கௌரவங்களைப் பெற்றார். இந்தியாவில் பரத நாட்டியக் கலைக்கு புத்துயிர் அளித்து, பரதநாட்டியத்தில் தனி முத்திரை பதித்த பாலசரஸ்வதி 66 வயதில் (1984) மறைந்தார்.

## பி ரூபா தேவி

**பெயர் :** பி ரூபா தேவி
**பிறப்பு :** 25-03-1989
**பெற்றோர் :** குருசாமி
**இடம் :** திண்டுக்கல் மாவட்டம், தமிழ்நாடு
**வகித்த பதவி :** கால்பந்து விளையாட்டு வீரர்
**விருதுகள் :** சக்தி விருது, ரெயின் டிராப்ஸ் நிறுவன விருது

**வாழ்க்கை வரலாறு :**

ரூபா தேவி, 25 மார்ச் 1989ல் பிறந்தார். தமிழ்நாட்டில் உள்ள திண்டுக்கல் மாவட்டத்தின் கால்பந்து விளையாட்டு வீராங்கனையாக தனது விளையாட்டு வாழ்க்கையை துவக்கியவர். 2016 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் சர்வதேச கால்பந்து சம்மேளமான ஃபிஃபாவின் நடுவராக நியமிக்கப்பட்டார். இதன் மூலம், தமிழகத்தில் இருந்து, ஃபிஃபா கால்பந்து நடுவராக செயல்பட

தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் பெண் என்ற பெருமையை ரூபா தேவி பெற்றார். இதுவரை, ஃபிஃபா அமைப்பின் பெண் நடுவர்களாக இந்திய பெண்கள் ஐவர் மட்டுமே தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. திண்டுக்கல்லில் உள்ள ஒரு சாதாரண குடும்பத்தை சேர்ந்த ரூபா தேவியின் விளையாட்டு வாழ்க்கைக்கு தேவையான அனைத்து செலவுகளையும் திண்டுக்கல் கால்பந்து அமைப்பு கவனித்துக் கொண்டது. பி.எஸ்.சி மற்றும் பி.எட். கல்வியை பூர்த்தி செய்துள்ள ரூபா தேவி, புதிய தலைமுறை தொலைக்காட்சியின் சக்தி விருது, ரெயின் டிராப்ஸ் நிறுவன விருது உள்பட பல விருதுகளை, தனது விளையாட்டு சாதனைகளுக்காக பெற்றுள்ளார்.

## ருக்மிணி தேவி அருண்டேல்

**பெயர் :** ருக்மிணி தேவி அருண்டேல்
**பிறப்பு : 29-02-1904**
**பெற்றோர் :** நீலகண்ட சாஸ்திரி, சேஷம்மாள்
**இடம் :** மதுரை, தமிழ்நாடு
**விருது :** பத்ம பூஷன் விருது
**வகித்த பதவி :** நடன கலைஞர்

**வாழ்க்கை வரலாறு :**

ருக்மிணி தேவி அருண்டேல் மதுரையில் பிறந்தவர். இவர் ஒரு புகழ்பெற்ற நடனக் கலைஞர். கலாசேத்திரா என்ற நடனப் பள்ளியினை நிறுவியவர். சமூகத்தில் ஒரு சாரார் மட்டும் பயின்ற சதிர் என்ற நடனத்திற்கு, பரதநாட்டியம் என்ற பெயரிட்டு பலரும் பரவலாக பயில முனைப்புடன் செயல்பட்டவர். 1977 ஆம் ஆண்டு, மொரார்ஜி தேசாய், இவரை இந்தியக் குடியரசுத் தலைவர் பதவிக்கு பரிந்துரைத்தப் போது அதை மறுத்தார்ருக்மிணி தேவி, 1904 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 29 ஆம் தேதி நீலகண்ட சாஸ்திரி - சேஷம்மாள் தம்பதியருக்கு மகளாக, மதுரையில் பிறந்தார். ருக்மிணியின் தந்தை நீலகண்ட சாஸ்திரி, அன்னி பெஸண்ட் துவக்கிய தியசோஃபிக்கல் சொஸைட்டியில் ஈடுபாடு கொண்டவராக இருந்தார். சாஸ்திரி தனது பணி ஒய்வுக்கு பிறகு சென்னையில் உள்ள அடையாரில், தன் குடும்பத்துடன் குடிபெயர்ந்தார். தியசோஃபிக்கல் சொஸைட்டியில் நடைபெறும் ஆண்டுவிழாக்களில், பல்வேறு கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. ருக்மிணி, ரவீந்திரநாத் தாகூர் எழுதிய மாலினி என்ற நாடகத்தில் நடித்தார். மேலும் ஒரு பாடலும் பாடினார். இதைப் பார்த்த அவர் தந்தை இசை பயில ஊக்கப்படுத்தினார். ருக்மிணி, கிரேக்க நடனமும் கற்றுக் கொண்டார். 1920 ஆம் ஆண்டில், ஜார்ஜ் சிட்னி அருண்டேல் என்பவரை இங்கிலாந்தில் இருந்து கல்வி மற்றும் இதர பணிகளில் தனக்கு உதவி புரிவதற்காக, அன்னி பெஸண்ட் அழைத்தார். அன்னி பெஸண்ட் அளித்த தேநீர் விருந்தில் ஜார்ஜ் அருண்டேலும், ருக்மிணியும் கலந்து கொண்டனர். இருவரும் ஈர்க்கப்பட்டு,